TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097155

1. District மாவட்டம் : நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 01/19 Date: நாள் 06.06.19

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Act (Amendment) 2018. Sections பிரிவுகள்: 7 of PC Act.
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 25.04.2019 – 2.30 Pm
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 03.06.2019 – 1.30 Pm

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் தகவல் வந்த நேரம் 06.06.2019 08.00 Hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் FIR பதிவு செய்த நேரம் 06.06.2019 10.30 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 35 கி.மீ வடக்கு திசை.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 25.04.2019 – செங்கட்டாங்கோடு VAO அலுவலகம்
03.06.2019 – தாலுக்கா அலுவலகம், சீர்காழி.

(c) In case outside limit of this Police Station, then the Name of P S District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ. நாகராஜன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அடைக்கலசாமி

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 73/2019 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் ஓய்வு வேளாண் அலுவலர் (g) Address : முகவரி எண்: 6, 5 வது குறுக்கு தெரு, சந்திரா நகர் சாமிநாதன் நகர், லாஸ்பேட், புதுச்சேரி - 605008.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. நடராஜன், ஜமேதார், தாலுக்கா அலுவலகம், சீர்காழி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது:

06.06.2019 ந் தேதி காலை 08.00 மணியளவில் புதுச்சேரியைச் சேர்ந்த திரு.நாகராஜன் என்பவர் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனு விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்:அ.நாகராஜன், த/பெ.அழகர்சாமி, எண்.6, 5-வது குறுக்கு தெரு, சங்கரதாஸ் சுவாமிகள் நகர், இலாஸ்பேட் அஞ்சல், புதுச்சேரி -605008 பெறுநர்: உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், நாகப்பட்டினம் அய்யா, நான் புதுச்சேரி, இலாஸ்பேட், சங்கரதாஸ் சுவாமிகள் நகர், No.6, 5-வது குறுக்கு தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் புதுச்சேரி மாநில அரசு வேளாண்துறையில், வேளாண் அலுவலராக பணிபுரிந்து கடந்த 31.05.2006-ந்தேதி பணி ஓய்வுபெற்றேன். நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், எருக்கட்டாஞ்சேரி கிராமத்தில் எனது தந்தை லேட்.அழகர்சாமி அவர்களால் வாங்கப்பட்ட குடியிருப்பு மனை புதிய புல

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

06.06.2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. ...................
Rank: நிலை ................ No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

எண்கள் 587/5 மற்றும் 587/6-ல் (பழைய புல எண்.305/A1) உள்ள மொத்தம் 42 சென்ட் எனக்கும் எனது தம்பி ராஜேந்திரனுக்கும் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். இதில் புல எண்.587/6 ல் உள்ள முழு இடமும் என் தம்பிக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்ததால், 2018 லேயே இந்த புல எண்ணுக்கு மட்டும் தம்பி பெயரில் தனிபட்டா ஆணையிடப்பட்டது. புல எண்.587/5 ல் 1001 சதுர மீட்டர் எனக்கும் எனது தம்பிக்கும் கூட்டு பட்டாவாக இருந்தது. அந்த பட்டா ஆணை தொ.மு.ப.மா.எண்.II.0422/2018/ஆ6- தேதி 03.08.2018 ஆகும். இந்த பட்டாவில் எனக்கும் எனது தம்பி பெயருக்கும் கூட்டு பட்டாவாக இருந்ததால், இந்த கூட்டு பட்டாவிலிருந்து என் தம்பி பெயரை நீக்கி, எனது பெயருக்கு 485 சதுர மீட்டருக்கு தனி பட்டா வேண்டி, நான் கடந்த 27.09.2018-ந்தேதி தரங்கம்பாடி தாலுக்கா அலுவலகத்திற்கு பதிவு தபால் மூலம் மனு ஒன்றை அனுப்பினேன். மேற்படி எனது மனு சம்பந்தமாக தரங்கம்பாடி தாலுக்கா அலுவலக சர்வேயர் அலுவலகத்தில் பணிபுரியும் நிலஅளவையர் திருமதி.சுகந்தி என்பவரிடம் செல்போனில் தொடர்பு கொண்டு கேட்டபோது, உங்களது மனு சர்வேயர் அலுவலகத்திற்கு வந்துவிட்டது, உங்களுக்கு திரு.நடராஜன், என்பவர்தான் சர்வேயர் என்றும், நீங்கள் அவரிடம் பேசிக்கொள்ளுங்கள் என்றும் அவரது செல்போன் நம்பரை தந்தார். நான் சர்வேயர் திரு.நடராஜன் என்பவரிடம் செல்போனில் தொடர்பு கொண்டு கேட்டபோது 25.04.2019-ந்தேதி உங்களது இடத்தை அளக்க வருகின்றோம் என்று கூறினார். அதன்படி கடந்த 25.04.2019-ந்தேதி சர்வேயர் திரு.நடராஜன் என்பவரும், அவருடன் VAO வும், அவரது உதவியாளருடன் வந்து இடத்தை மதியம் அளந்தார்கள். மேற்படி இடத்தை அளந்துவிட்டு, எருக்கட்டாஞ்சேரி VAO அலுவலகத்திற்கு என்னை வரச்சொன்னார். அதனால் நான் மதியம் 2.30 மணியளவில் VAO அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு என்னிடம் சர்வேயர் நிலத்தை அளந்ததாக எழுதி கையெழுத்து வாங்கிகொண்டார். பிறகு என்னை தனியே வெளியே அழைத்து வந்து தனிப்பட்டா வழங்க பரிந்துரை செய்ய பணம் செலவாகும் அதற்கு நீங்கள் ரூ.4,500/- பணம் தரவேண்டும் என என்னிடம் கேட்டார். அப்போது நான் அவர் கேட்ட பணத்தை கொடுக்கவில்லை. பிறகு தனி பட்டா பரிந்துரை செய்வது சம்பந்தமாக மேற்படி சர்வேயரை நான் பல முறை செல்போனில் தொடர்பு கொண்டு கேட்டபோதும் கொடுக்கவில்லை. அதனால் கடந்த 30.05.2019-ந்தேதி தரங்கம்பாடி சர்வேயர் அலுவலகத்திற்கு சென்று சர்வேயர் திரு.நடராஜனை பார்த்தபோது அவர் அங்கு இல்லை.

அப்போது அலுவலகத்தில் இருந்த ஹெட் சர்வேயரிடம் கேட்டபோது, சர்வேயர் திரு.நடராஜன் காலையில் வந்தார், தற்போது வெளியில் சென்று விட்டார், திங்கள் கிழமைதான் அவரை பார்க்கலாம் என்று சொன்னார். அன்று மாலை 5.00 மணி வரை நான் காத்திருந்துவிட்டு ஊருக்கு சென்றுவிட்டேன். பிறகு மேற்படி சர்வேயர் திரு.நடராஜன் அவர்களை 03.06.2019-ம்தேதி மதியம் 1.30 மணியளவில் அவரது அலுவலகத்தில் நேரில் சென்று பார்த்து எனது தனி பட்டா சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் என்னிடம் இதற்கு முன் நான் உங்களிடம் எவ்வளவு பணம் கேட்டேன் என்று கேட்டார், அதற்கு நான் ரூ.4,500/- பணம் கேட்டீர்கள் என்று சொன்னேன், அதற்கு மேற்படி சர்வேயர் அந்த பணத்தில் கொஞ்சம் குறைத்துக்கொண்டு ரூ.3000/- பணம் கொடுங்கள் நாளைக்கு தனிப்பட்டா வழங்க பரிந்துரை செய்தும், நிலம் அளந்ததற்கான அறிக்கையையும் அனுப்பிவிடுகின்றேன் என்று சொன்னார். எனக்கு சர்வேயர் திரு.நடராஜன் கேட்ட லஞ்சப்பணம் ரூ.3000/- த்தை கொடுக்க விருப்பமில்லை. என்னிடம் ரூ.3000/- லஞ்சம் கேட்ட திரு.நடராஜன், சர்வேயர், தாலுக்கா அலுவலகம், தரங்கம்பாடி என்பவர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். 04.05.2019 ந்தேதி தரங்கம்பாடியில் எனக்கு பத்திரப்பதிவு இருந்ததாலும், 05.06.2019 ந் தேதி ரம்ஜான் விடுமுறை என்பதாலும், புகார் கொடுக்க என்னால் உடன் வர இயலவில்லை. இத்துடன் நான் தரங்கம்பாடி தாலுக்கா அலுவலகத்திற்கு 27.09.2018-ந்தேதி அனுப்பிய மனுவின் நகல் அதற்காக நான் பெற்ற ஏற்பளிப்பு சான்று, எனது தந்தை எனக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் எண் 119/1988 ன்நகல், எனது இடத்திற்கான சிட்டா, அடங்கல் மற்றும் தரங்கம்பாடி தாசில்தார் அலுவலகத்தில் வழங்கப்பட்ட செயல்முறை கடிதம் தொ.மு.ப.மா.II. 0422/2018ஆ6 நாள் 03.08.2018 ஆகியவற்றின் நகல் இணைத்துள்ளேன். இப்படிக்கு, (ஆங்கிலத்தில் ஒப்பம்) A.NAGARAJAN 06.06.2019.

அய்யா, மேற்படி புகார் 06.06.2019 ந்தேதி காலை 08.00 மணியளவில் பெறப்பட்டது. புகார்தாரர் மற்றும் எதிரி குறித்து முன் விசாரணை செய்யப்பட்டது. இப்புகார் மனு மீது 06.06.2019 ந்தேதி 10.30 மணியளவில் நாகப்பட்டினம் V&AC குற்ற எண்.01/2019, U/s.7 of the Prevention of Corruption Act (Amendment) 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. (Sd) Tmt.M.Arulpriya 06.06.2019 Inspector of Police, V&AC, Nagapattinam.

I am submitting the Original F.I.R, along with the complaint and its, enclosures, to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Nagapattinam and the copies of the F.I.R. to all other concerned Officials and for file.

[signature]
06/06/19.
Inspector of Police.
V&AC. Nagapattinam